# எளிய குறிப்புகள்

1. நண்பர்கள் மற்றும் அண்டை வீட்டுக்காரர்கள் தமது சாதனங்களை எங்கே வாங்கினார்கள் என்று கேளுங்கள்.
2. நம்பத்தகுந்த ஒரு நிறுவனம்தான் சாதனங்களை வாங்க சிறந்த இடமாகும்.
3. வாங்குவதற்கு முன்னால், கடைக்காரர் திருப்பி எடுத்துக் கொள்வது மற்றும் உத்தரவாதம் குறித்த கொள்கையைப் புரிந்து கொள்ளுங்கள்.
4. ஒரு சாதனத்தை வாங்கும்போது, ஒப்பந்தத்தில் உங்கள் முகவரி, சாதனத்தைப் பற்றிய விவரம், விலை ஆகிய எல்லா விவரமும் இருக்கிறதா என்று சரிபார்த்துக் கொள்ளவும். வீட்டுக்கு டெலிவரி தேவை என்றால், டெலிவரி தேதியும் அதில் உள்ளதா என்று பார்த்துக் கொள்ளவும்.
5. வாங்குவதற்கு முன்னால் உத்தரவாதத்தைப் படித்துப் பாருங்கள். அதில் என்னென்ன அடங்கும், எத்தனை காலத்திற்கு செல்லுபடியாகும் என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். உத்தரவாதத்தை செல்லாததாக ஆக்கக்கூடிய நிபந்தனைகள் அதில் இருக்கலாம். சாதனம் இயங்கவில்லை என்றால் நிறுவனம் என்ன செய்யும்? சாதனத்தின் எல்லா பாகங்களும் உத்தரவாதத்தின்கீழ் வருகிறதா?
6. சாதனத்தை வாங்கிய பிறகு, விற்பனை ரசீது, ரத்தாகிப் போன காசோலை, உரிமையாளர் கையேடு, உத்தரவாத ஆவணங்கள் என அனைத்தையும் பத்திரமாக வைத்திருக்கவும்.
7. சாதனம் எந்த நோக்கத்திற்கானதோ, அதற்கு அந்தச் சாதனம் தகுதி பெற்றதாக இருப்பதை உறுதி செய்வது ஒன்டாரியோ சட்டத்தின்படி அனைத்து சப்ளையர்களின் கடமையாகும். பொருட்களுக்கும் சேவைகளுக்குமான விலையை மற்ற கடையுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.
8. ஆற்றலைப் பயன்படுத்துவதில் குறைந்த திறனுடைய அல்லது சராசரித் திறனுடைய சாதனங்களை விடவும், ஆற்றலைக் குறைவாகப் பயன்படுத்தும் திறனுடைய சாதனங்கள் விலை அதிகமாக இருக்கலாம். ஆனால் அவ்வாறு நீங்கள் கொடுத்த அந்த அதிகப் பணத்திற்கு ஈடான பணம், ஆற்றல் சேமிப்பின் மூலம் கிடைத்த லாபமாக, சாதனம் தேய்மானம் அடைவதற்கு வெகுகாலம் முன்பே உங்களுக்குக் கிடைத்திருக்கும்.

**கீழ்க்கண்ட விஷயங்களில் நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான கூடுதல் ஆலோசனைகள் www.cbs.gov.on.ca இணையத்தளத்தில் கிடைக்கும்:**

- நுகர்வோர் உரிமைகளைக் காத்துக் கொள்க
- பொருட்களை வாங்குதல்
- உங்கள் இல்லம்
- உறுப்பினராதல் மற்றும் சேவைகள்
- மோட்டார் வாகனங்கள்
- சொந்த நிதி விஷயங்கள்
- புகார் பதிவு செய்க
- அடையாளத் திருட்டு

அமைச்சினைப் பற்றிய பொதுவான தகவல்கள் அறிய **www.mgs.gov.on.ca** இணையத்தளத்திற்குச் செல்லுங்கள்; அல்லது அழையுங்கள்: **(416) 326-8555** அல்லது இலவசத் தொலைபேசி **1-800-268-1142** (ஒன்டாரியோவில்). TTY/டெலிடைப்ரைட்டர் பயன்படுத்துவோருக்கு மட்டும்: **(416) 325-3408** அல்லது இலவசத் தொலைபேசி: **1-800-268-7095**

தயவுசெய்து உங்கள் கருத்துகள், பதில்கள் மற்றும் கேள்விகளை அனுப்புக: **cbsinfo@cbs.gov.on.ca**

© Queen's Printer for Ontario 2005

ISBN 0-7794-8501-7





# இல்லச் சாதனங்கள் குறித்து நீங்கள் அறிந்திருக்க வேண்டியவை

Ontario

# அறிவார்ந்த நுகர்வோர் வணிகத்துக்கு சிறந்தவர்கள்

**நுகர்வோர் பாதுகாப்பில் ஒன்டாரியோ வழிகாட்டியாய் திகழ்கிறது. நுகர்வோருக்கும் வர்த்தகங்களுக்கும் தெளிவான விதிகளை வகுத்திருக்கிறது. உங்கள் உரிமைகளை அறிந்து கொள்ளுங்கள் – கூர்மதியுடன் வாங்கி சந்தையில் உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்.**

## இல்லச் சாதனங்கள்

இல்லச் சாதனங்கள் என்பவை பெரும் முதலீடாகும். அவை 5 முதல் 10 ஆண்டுகள் வரை நீடித்து உழைக்க வேண்டும். இல்லச் சாதனங்களை வாங்கும்போதும், பழுதுபார்க்கும்போதும் உங்களுக்கு சட்டப்படி பாதுகாப்பு உண்டு. சில முன்னெச்சரிக்கைகளைக் கைக்கொண்டால் பொதுவான புகார்களைத் தவிர்க்க முடியும்.

***எளிய குறிப்புகள்:***

- நண்பர்கள் மற்றும் அண்டை வீட்டுக்காரர்கள் தமது சாதனங்களை எங்கே வாங்கினார்கள் என்று கேளுங்கள். வாங்கிய சாதனமும், கடைக்காரரின் சேவையும் அவர்களுக்குத் திருப்தி தருகிறதா என்று கேட்டறியுங்கள்.
- நம்பத்தகுந்த ஒரு நிறுவனம்தான் சாதனங்களை வாங்குவதற்கு சிறந்த இடமாகும்.
- வாங்குவதற்கு முன்னால், கடைக்காரர் திருப்பி எடுத்துக் கொள்வது மற்றும் உத்தரவாதம் குறித்த கொள்கையைப் புரிந்து கொள்ளுங்கள்.
- ஒரு சாதனத்தை வாங்கும்போது, ஒப்பந்தத்தில் உங்கள் முகவரி, சாதனத்தைப் பற்றிய விவரம், விலை ஆகிய எல்லா விவரமும் இருக்கிறதா என்று சரிபார்த்துக் கொள்ளவும். வீட்டுக்கு டெலிவரி தேவை என்றால், டெலிவரி தேதியும் அதில் உள்ளதா என்று பார்த்துக் கொள்ளவும்.
- வாங்குவதற்கு முன்னால் உத்தரவாதத்தைப் படித்துப் பாருங்கள். அதில் என்னென்ன அடங்கும், எத்தனை காலத்திற்கு செல்லுபடியாகும் என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். உத்தரவாதத்தை செல்லாததாக ஆக்கக்கூடிய நிபந்தனைகள் அதில் இருக்கலாம். சாதனம் இயங்கவில்லை என்றால் நிறுவனம் என்ன செய்யும்? சாதனத்தின் எல்லா பாகங்களும் உத்தரவாதத்தின்கீழ் வருகிறதா? என்று பார்க்கவும்.
- சாதனத்தை வாங்கிய பிறகு, விற்பனை ரசீது, ரத்தாகிப் போன காசோலை, உரிமையாளர் கையேடு, உத்தரவாத ஆவணங்கள் என அனைத்தையும் பத்திரமாக வைத்திருக்கவும்.
- சாதனம் எந்த நோக்கத்திற்கானதோ, அதற்கு அந்தச் சாதனம் தகுதி பெற்றதாக இருப்பதை உறுதி செய்வது ஒன்டாரியோ சட்டத்தின்படி அனைத்து சப்ளையர்களின் கடமையாகும். பொருட்களுக்கும் சேவைகளுக்குமான விலையை மற்ற கடையுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.
- ஆற்றலைப் பயன்படுத்துவதில் குறைந்த திறனுடைய அல்லது சராசரித் திறனுடைய சாதனங்களை விடவும், ஆற்றலைக் குறைவாகப் பயன்படுத்தும் திறனுடைய சாதனங்கள் விலை அதிகமாக இருக்கலாம். ஆனால் அவ்வாறு நீங்கள் கொடுத்த அந்த அதிகப் பணத்திற்கு ஈடான பணம், ஆற்றல் சேமிப்பின் மூலம் கிடைத்த லாபமாக, சாதனம் தேய்மானம் அடைவதற்கு வெகுகாலம் முன்பே உங்களுக்குக் கிடைத்திருக்கும்.

***உங்கள் உரிமைகள்:***

- நிறுவனம் உறுதியளித்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் பொருட்களோ சேவைகளோ உங்களுக்குக் கிடைக்கவில்லை என்றால், நீங்கள் ஒப்பந்தத்தை ரத்து செய்யலாம்.

## சாதனங்களைப் பழுதுபார்த்தல்

***எளிய குறிப்புகள்:***

- பழுதுபார்க்க வேண்டிய பாகத்தின் குறிப்பு, பழுது பார்க்கும் கட்டணம், உங்கள் தொடர்பு முகவரி இவை எல்லாம் ஒப்பந்தத்தில் உள்ளதா என்பதை உறுதி செய்யவும்.
- பழுதுபார்ப்பதற்கான உத்தேச மதிப்பீடு தரப் பட்டிருந்தால், இறுதிக் கட்டணமானது உத்தேச மதிப்பீட்டில் இருந்ததைவிட 10 சதவிகிதத்துக்கும் அதிகமாகக்கூடாது. இது சட்டமாகும்.

## உதவி தேவையா?

அரசுச் சேவைகள் துறை அமைச்சிடம் (Ministry of Government Services) முறையாக ஒரு புகார் பதிவு செய்வதற்கு முன்னால் கீழ்க்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றவும்:

1. வாங்குவதற்கு முன்னால் உத்தரவாதத்தைப் படித்துப் பாருங்கள். அதில் என்னென்ன அடங்கும், எத்தனை காலத்திற்கு செல்லுபடியாகும் என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். உத்தரவாதத்தை செல்லாததாக ஆக்கக்கூடிய நிபந்தனைகள் அதில் இருக்கலாம். சாதனம் இயங்கவில்லை என்றால் நிறுவனம் என்ன செய்யும்? சாதனத்தின் எல்லா பாகங்களும் உத்தரவாதத்தின்கீழ் வருகிறதா? என்று பார்க்கவும்.
2. நிறுவனத்தைத் தொடர்பு கொண்டு உங்கள் புகாரைப் பற்றி குறிப்பாக விளக்கவும்.
3. புகாரை எழுத்து வடிவில் தரவும். அதை டெலிவரி செய்ததற்கான ஆதாரத்தையும், நிறுவனத்துடன் மேற்கொண்ட வேறெந்தக் கடிதங்களையும் வைத்திருக்கவும்.
4. அப்போதும் திருப்தி கிடைக்கவில்லை என்றால், எமது இணையத் தளத்தில் முறையாக புகார் பதிவு செய்ய **www.mgs.gov.on.ca** இணையத்திற்குச் செல்லவும். அதில் 'Online Services' என்ற பிரிவிற்குச் செல்லவும்.

## மேலும் தகவல்கள் பெற

இது குறித்தும், நுகர்வோர் பாதுகாப்பு சம்பந்தமான இதர விஷயங்கள் குறித்தும் மேலும் விவரம் அறிய, அரசுச் சேவைகள் துறை அமைச்சின் (Ministry of Government Services) **www.mgs.gov.on.ca** இணையத் தளத்திற்குச் செல்லுங்கள். அல்லது **(416) 326-8555** என்ற எண்ணை அல்லது இலவசத் தொலைபேசி **1-800-268-1142** என்ற எண்ணை அழைக்கவும். TTY தொலைபேசி எண் – **(416) 325-3408** அல்லது இலவசத் தொலைபேசி **1-800-268-7095**.